## IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| Case No | : | SC.77/2019 |
| Prosecution Witness | : | PW-2 |
| Name | : | ராஜேந்திரன் |
| Father Name | : | பேச்சிமுத்து |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 50 |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 26.09.2024***

**<u>1 முதல் 10 *எதிரிகள் வருகை.*</u>**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u> :-**

நான் பழைமாரியம்மன்கோவிலில் சாலைக்கார தெருவில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். இறந்துபோன அப்பு (எ) ஜெயகாந்தன் என்பவரை எனக்கு தெரியும். அவர் எங்கள் தெருவில் வசித்து வந்தவர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்கில் இறந்துபோன அப்பு (எ) ஜெயகாந்தன் எனது உறவினர் என்றால் சாட்சி முதலில் ஆமாம் என்று தலை ஆட்டிவிட்டு பிறகு உறவினர் இல்லை என்று கூறுகிறார். நான் ஆஜர் எதிரிகளிடம் பணம் பெற்றேன் என்றால் இல்லை. ஆஜர் எதிரி கலிவரதன் என்பவரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி கலிவரதன் (எ) விவேகானந்தன் உறவினர் செந்தில் என்பவரை இறந்துபோன அப்பு கொன்றுவிட்டதாக முன்விரோதம் இருந்தது என்றும் அந்த முன்விரோதத்தில் ஆஜர் எதிரி கலிவரதன் (எ) விவேகானந்தன் மற்றும் வேறு நபர்களும் திலீப் என்பவரை வெட்டி கொன்றுவிட்டார்கள் என்றும் அதே முன்விரோதத்தில் இறந்துபோன அப்பு (எ) ஜெயகாந்தனை

ஆஜர் எதிரி கலிவரதன் (எ) விவேகானந்தன் தான் நடத்தி வரும் பாருக்கு வரக்கூடாது என்று சத்தம் போட்டு வந்தார் என்றும் பின்னிட்டு அதே முன்விரோத்தில் ஆஜர் எதிரிகள் அனைவரும் சேர்ந்து 18.1.2018 அன்று இரவு 9.45 மணியளவில் இறந்துபோன அப்பு (எ) ஜெயகாந்தனை வெட்டியரை பார்த்துவிட்டு அசா1க்கு தகவல் கூறி அவருடனும் தெருவில் உள்ள மற்றவர்களுடனும் மீண்டும் சம்பவம் இடம் சென்று பார்த்தோம் என்றும் அப்போது ஆஜர் எதிரிகள் அப்பு (எ) ஜெயகாந்தனை ஆயுதங்களால் வெட்டி தாக்கிக்கொண்டிருந்தார்கள் என்றும் எங்களை நெருங்கவிடாமல் கிட்டே வந்தால் கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டிக்கொண்டே தப்பி ஓடிவிட்டனர் என்றும் நாங்கள் இ றந்துபோன அப்புவை பார்க்கும் போது அவரது நடுவிரல் ஆள்காட்டிவிரல் வெட்டப்பட்டு தொங்கிய நிலையிலும் வலது கை மோதிர விரல் வெட்டுப்பட்டும், தலையின் இடதுபக்கம் கண்டபடி சிதைந்தும் இருந்தது என்று போலிசார் சம்பவ இடத்தில் வைத்து 19.01.2018 அன்று விசாரிக்கும் போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளிடம் பணத்தை பெற்றுக்கொண்டு அவர்களை காப்பாற்றுவதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| Case No | : | SC - 77/2019 |
| Prosecution Witness | : | PW- 3 |
| Name | : | ஆரோக்கியமுருகன் |
| Father Name | : | ஜெயராமன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Occupation | : | |
| Religion | : | |
| Age | : | 49 |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 26.09.2024***

**1 முதல் 10 *எதிரிகள் வருகை.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :-

நான் பழையமாரியம்மன்கோவில் சாலைக்கார தெருவில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன அப்பு (எ) ஜெயகாந்தன் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் 1 முதல் 10 வரை உள்ளவர்களை எனக்கு தெரியும். இடமிருந்து முதலில் நிற்பவர் லெட்சுமணன்,2.கலிவரதன் (எ) விவேகானந்தன், 3.சுரேஷ், 4.முத்தமிழ்செல்வன், 5.பாலா. 6. தினேஷ், 7.தினேஷ், 8. கரிகாலன், 9.கோபிநாத், 10.அஜித்குமார். 18.1.2018ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது எனக்கு எதிர்த்தார்ப்பில் உள்ள சின்னராஜ் என்பவர் வந்து கூப்பிட்டார். அப்புவிடம் ஆஜர் எதிரிகள் தகறாறு செய்வதாக சொல்லி வா போவோம் என்று கூப்பிட்டார். அப்போது அருகில் இருக்கும் மோகன் மற்றும் கணேசன் ஆகியோரையும் சின்னராஜ் கூப்பிட்டார். நான் இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு ஆதிமாரியம்மன்கோவிலுக்கும் காமராஜ் நகருக்கும் அருகில் உள்ள டாஸ்மாக் பாருக்கு சென்றோம். அங்கு ஆஜர் எதிரிகள் 10 பேரும் 7 அரிவாள்கள், 3 வாள்கள் வைத்திருந்தார்கள். சின்னராஜ் என் பிள்ளையை ஒன்றும் செய்துவிடாதீர்கள் என்று கத்தினார். அப்போது ஆஜர் எதிரி கலிவரதன் எல்லாரும் வந்துவிட்டான்டா அவனை வெட்டு டா என்று அப்பு (எ) ஜெயகாந்தனின்

தலையில் வெட்டினார். பிறகு லெட்சுமணன் அரிவாளால் வெட்டினார். பிறகு சுரேஷ் அரிவாளால் வெட்டினார். எதிரிகள் தலையில் வெட்டியதால் அப்பு கீழே விழுந்துவிட்டார். பிறகு எதிரிகள் அனைவரும் சேர்ந்து வெட்ட ஆரம்பித்தார்கள். சின்னராஜ் கத்தி கதறினார். பிறகு ஆஜர் எதிரிகள் ஆளுக்கொரு வெட்டு வெட்டிவிட்டு இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டாகள். சின்னராஜ் தாலுக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் சம்பவ இடத்திற்கு உடனே வந்துவிட்டார்கள். அப்புவின் உடலை ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

<u>1,3,4, எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

எதிரிகளை எனக்கு 10 வருடமாக சின்ன வயதில் இருந்தே தெரியும். அவர்கள் ஒருவருக்கொருவர் உறவினர்கள் இல்லை என்றால் சரியல்ல உறவினர்கள் தான். ஒரே சாதியை சேர்ந்தவர்கள். குறிப்பிட்டு அவர்களுக்குள் என்ன உறவு என்று எனக்கு தெரியாது. அசா1 சின்னராஜ் எனது அக்காவை திருமணம் செய்துள்ளார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். 18.1.2018ம் தேதி இரவு கொலை நடந்தது. மறுநாள் காலை என் மாமா சின்னராஜ் என்பவருடன் போலிஸ்ஸ்டேசனுக்கு சென்றேன். அங்கு போலிசார் என்னை விசாரித்தார்கள். எங்களுடன் கணேசனும் வந்திருந்தார். 18.1.2018ம் தேதி நாங்கள் காவல் நிலையம் சென்ற போது இரவு 10.45 மணி இருக்கும். புகாரை அசா 1 சொல்லச்சொல்ல போலிசார் எழுதினார். போலிசார் என்னை விசாரித்தபோது எதிரிகள் 10பேரையும் தெரியும் என்று சொன்னேன். எங்கள் வீட்டின் எதிர் வீடு தான் சின்னராஜ் வீடு என்று போலிசார் விசாரணையில் சொன்னேன். எனது வீட்டிற்கும் டாஸ்மாக் பாருக்கும் 300 அடி தூரம் தான் இருக்கும். போலிசார் விசாரிக்கும் போது வீட்டில் இருந்து பாருக்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம் என்று சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. இருசக்கர வாகனத்தில் பாருக்கு செல்ல 7 நிமிடம் ஆகும். நீதிமன்றத்தில் முதலில் நிற்கும் ஆஜர் எதிரிகள் 7பேர் கையில் அரிவாள் வைத்திருந்தார்கள் மற்ற மூவர் கையில் வாள் வைத்திருந்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கும் போது சின்னராஜ் என் பிள்ளையை விட்டுவிடுங்கள் என்று கத்தியதாக சொன்னேனா என்றால் இல்லை. வெட்டுப்பட்டவுடன் அப்பு கீழே விழுந்துவிட்டார் என்ற விபரம் சொன்னேன். சின்னராஜ் காவல் நிலையம் செல்வதற்கு முன்பே போலிசார் சம்பவத்தை கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் இல்லை. சின்னராஜ் கூப்பிட்டவுடன் எனது வீட்டல் இருந்து பாருக்க ஓடிப்போய் பார்த்ததாக போலிசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு கேள்விப்பட்டு சென்ற எங்கள் 4 பேரை தவிர தெருக்காரர்கள் நிறைய பேர் வந்தார்கள். எத்தனை பேர் யார் என்று குறிப்பிட்டு தெரியாது. நாங்கள் இவ்வளவு பேர் இருந்தும் அப்புவை வெட்டும் போது தடுக்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் கையில் அரிவாள் வைத்திருந்தார்கள். பாரும் ஒயின்ஷாப்பும் ஒரே கட்டிடம் தான். பார் நாலாபுறமும் மூடிய பகுதி என்றால் சரிதான். வெளியில் இருந்து பார்த்தார் பாருக்குள் என்ன நடக்கிறது என்று தெரியும். நான் 15 அடி தூரத்தில் நின்று பார்த்தேன். பாரில்அப்பு மற்றும் எதிரியை தவிர வேறு யாரும் இல்லை. அப்புவின் மனைவி மகாலெட்சுமி, சின்னராஜ் மனைவிஜெயந்தி ஆகியோர் எங்களுடடன் வந்தார்களா என்றால் இல்லை. பொதுவாக ஒயின்ஷாப், பார் மூடிவிடுவார்கள் என்றால் தெரியாது. வெட்டுப்பட்ட சம்பவம்

சுமார் 10 நிமிடத்திலேயே முடிந்துவிட்டது. அரிவாள் மற்றும் வாள்களை கையில் எடுத்துச்சென்றுவிட்டனர். எதிரிகள் ஒரே நேரத்தில் வெட்டினார்களா அல்லது தனித்தனியாக வெட்டினார்களா என்றால் முதலில் 3பேர் தலையில் வெட்டினார்கள். அப்பு கீழே விழுந்தவுடன் மற்றவர்கள் தாக்கினார்கள். 7 பேரும் ஒரே நேரத்தில் தாக்கும்போது யார் யார் எங்கெங்கு வெட்டினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் தெரியாது. அப்புவின் மீது நிறைய வழக்குகள் உள்ளது என்றும் அவர் ரவுடி பட்டியலில் உள்ளார் என்றால் தெரியாது. அப்பு மது அருந்தவில்லை. எனக்கு அப்புவுக்கு காயம்பட்டது தெரியாது என்றும் அப்பு எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அப்புவின் காயத்திற்கும் எதிரிகளுக்கும் தொடர்பு இல்லை என்றும் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>6 முதல் 9 எதிரிகள், 1, 3, 4, எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.</u>

<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் விசாரிக்கும் போது நாங்கள் ஓடிச்சென்று பார்த்தபோது அப்பு இறந்துகிடந்தான் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சாலைக்கார தெருவுக்கும் அண்ணாநகருக்கும் இடையில் அரை கிமீ தூரம் இருக்கும். அண்ணா நகருக்கும் காமராஜர் நகருக்கும் இடையே கால் கிமீதூரம் இருக்கும். காமராஜர் நகருக்கும் முன் விசாரணையில் சொல்லியுள்ள பாருக்கும் கால் கிமீ தூரம் இருக்கும் என்றால் இல்லை காமராஜ் நகரை ஒட்டியே பார் உள்ளது. வீட்டில் இருந்து 2, 3 இருசக்கர வாகனத்தில் பாருக்கு சென்றோம். இறந்துபோனவர் எனது அக்காவின் மகன். அப்புவை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லவேண்டும் என்று தோணவில்லை என்றால் அங்கு இருந்தவர்கள் அப்புவிடம் நெருங்கவிடவில்லை. பிறகு மருத்துவமனைக்கு செல்லாமல் நேராக காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். சம்ப வ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு நானும் சின்னராஜ் என்பவரும் ஒரே வாகனத்தில் சென்றோமா தனித்தனி வாகனத்தில் சென்றோமா என்றால் ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு காமராஜர் நகர், அண்ணாநகர், சாலைக்காரதெரு வழியாக தான் சென்றேன். எங்கள் பகுதியில் வீடுகள் நெருக்கமாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து சாலைக்கார தெரு எங்கள் வீட்டை தாண்டி தான் சென்றோம். அந்த தெருவில் செல்லும் போது நேரடியாக சென்றோம். எங்கும் நிற்கவில்லை என்றால் சரிதான். செல்லும் போது அப்புவின் வீட்டில் சொல்லாமல் நேரடியாக காவல் நிலையத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். அப்போது எனது வீட்டில் எனது மனைவி அகிலா, எனது அம்மா பாப்பாத்தி மற்றும் எனது குழந்தைகள் இருந்தார்கள். காவல் நிலையத்தில் போலிசார் புகாரை என் மாமா சொல்ல சொல்ல எழுதினார். பின் அதில் என் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். பின்னர் காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு கீழவாசல் மார்க்கெட், ஆட்டுமந்தைதெரு வழியாக சாலைக்கார தெரு வழியாக சென்றேன். அப்போதும் என்

வீட்டை தாண்டி தான் போலிசுடன் சென்றேன் என்றால் சரிதான். அப்போதும் எங்கள் வீட்டில் சொல்லாமல் போலிசுடன் நேராக சம்பவ இடம் சென்றேன். அப்போது சம்பவ இடத்தில் சுற்றி ஆட்கள் இருந்தார்கள். யார் என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் போலிசார் வந்து பார்த்து ஆம்புலன்சில் அப்புவை ஏற்றிஅனுப்பினார். எவ்வளவு நேரம் போலிசார் அங்கு இருந்தார்கள் என்று ஞாபகம் இல்லை. பிறகு நான் மருத்துவமனைக்கு சென்றேன். இறந்து அப்புவின் மீது நிறைய குற்ற வழக்குகள் உள்ளது என்றால் தெரியாது. எனக்கும் அப்புவுக்கும் நல்ல பேச்சு வார்த்ததை உள்ளது. சாதாரணமாக வழக்குகளை பற்றி பேசுவது இல்லை. நான் முன்விசாரணையில் சொன்னது போல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இறப்பிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. காவல்நிலையம் செல்வதற்கு முன்பு அப்புவை தூக்கி பார்த்தேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றும் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் சொன்னால சரியல்ல.

**5 மற்றும் 10-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்திற்கு சின்னராஜ் உடன் சென்றபோது இரவு சுமார் 10.00 மணிக்கு மேல் இருக்கும். காவல் நிலையத்தில் இருக்கும் போது என்ன நடந்தது என்று போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை அவரிடம் விசாரித்தார். போலிசார் விசாரித்தபோது எல்லா எதிரிகளின் தகப்பனார் பெயரை சொன்னோம். இறந்துபோன ஜெயகாந்தன் என்பவர் ஒயின்ஷாப்பில் அதிக குடிபோதையில் தகறாறு செய்ததால் யாரோ சிலநபர்கள் வெட்டிவிட்டார்கள் என்றும் இறந்தபிறகு தான் நாங்கள் சம்பவ இடத்திற்கே போனோம் என்றும் இறந்தவர் அக்கா மகன் என்பதால் தற்போது பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

## DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| Case No | : | SC.77/2019 |
| Prosecution Witness | : | PW-4 |
| Name | : | கணேசன் |
| Father Name | : | சரவணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 49 |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 26.09.2024***

**1 முதல் 10 *எதிரிகள் வருகை***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :-

நான் பழையமாரியம்மன்கோவிலில் சாலைக்கார தெருவில் வசித்து வருகிறேன். நான் மானோஜிப்பட்டியில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில் பகுதிநேர உடற்கல்வி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன அப்பு (எ) ஜெயகாந்தனை தெரியும். அவர் எங்கள் உறவுக்காரர். ஆஜர் எதிரிள் 1 முதல் 10 ஐ எனக்கு தெரியும். சாட்சி எதிரிகள் அனைவரையும் சரியாக அடையாளம் காட்டினார். 18.1.2018ம் தேதி இரவு 9.45ல் இருந்து 10.00மணிக்குள் ஆதிமாரியம்மன்கோவில் அருகில் உள்ள டாஸ்மாக் கடையில் வைத்து அப்பு (எ) ஜெயகாந்தனை ஆஜர் எதிரிகள் 10பேரும் கொலை செய்தார்கள். நான் வீட்டில் இருக்கும் போது அப்பு (எ) ஜெயகாந்தனின் அப்பா அசா1 சின்னராசு அப்புவுடன் ஆஜர் எதிரிகள் தகறாறு செய்வதாக சொன்னார். உடனே நான், ஆரோக்கியமுருகன், சின்னராசு, இளஞ்செழியன், மோகன்ராஜ், மேலும் நிறையபேர் வண்டியை எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு சென்றோம். அங்கு ஒரே தகறாராக இருந்தது. விவேகானந்தன் என்பவர் எங்களை பார்த்தவுடன் சொந்தக்காரர்கள் எல்லாம் வந்துவிட்டார்கள் இனிமேல் அப்புவை உயிருடன் விட்டால் நம்மை போலிசில் காட்டிக்கொடுத்துவிடுவான் அவனை கொல்லுங்கடா என்று சொல்லி விவேகானந்தம் முதலில் அப்புவை தலையில் வெட்டினார். 2வது அப்புவை லெட்சுமணன் வெட்டினார். 3வது சுரேஷ்குமார் வெட்டினார். பிறகு அப்பு கீழே விழுந்துவிட்டார். பிறகு ஆஜர் எதிரிகள் அப்புவை சுற்றி நின்று கன்னாபின்னா என்று வெட்டினார்கள். எங்களை கிட்டே போகவிடவில்லை.கிட்டே வந்தால் அனைவரையும் வெட்டிவிடுவோம் என்றார்கள். சம்பவம் 10 நிமிடத்தில் முடிந்துவிட்டது. ஆஜர் எதிரிகள் அவன் செத்துட்டான்டா போகலாம் என்று சொல்லி அனைவரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். பிறகு அசா1உடன் சேர்ந்து காவல் நிலையத்திற்கு

சென்றோம். அங்கு அசா1 புகார் கொடுத்தார். போலிசார் சம்பவம் நடந்த இடத்திற்கு ஆம்புலன்சை அழைத்து வந்துவிட்டார்கள். அங்கிருந்து அப்புவின் சடலத்தை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனை அனுப்பி வைத்தோம். நானும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு சில Formalityகளை செய்து பிணவறைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1,3,4, எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

தஞ்சாவூரில் உள்ள அரிசிக்கார தெருவை தெரியும். கடந்த 15 வருடங்களாக அங்கு தான் குடியிருந்து வருகிறேன். அரிசிக்கார தெருவுக்கும் சாலைக்கார தெருவுக்கும் 500 மீட்டம் தூரம் இருக்கும். அப்புவுடன் தகராறு நடந்ததாக சின்னராசு என்னிடம் சொன்னார். அப்புவை வெட்டியதாக சொன்னார்களா என்றால் இல்லை தகராறு நடக்கிறது வாங்க என்று சொன்னார். சின்னராசு வீட்டிற்கும் டாஸ்மாக் பாருக்கும் 200 அல்லது 300 மீட்டர் தூரம் இருக்கும். போலிசார் என்னை சம்பவம் நடந்த மறுநாள் காலை காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். சின்னராசுடன் காவல் நிலையத்திற்கு ஆரோக்கிய முருகன், மோகன்ராஜ், இளஞ்செழியன், நான் சென்றேன். எங்களுடன் 10க்கும் மேற்பட்டவர்கள் உறவினர்கள் என்ற முறையில் வந்திருந்தனர். காவல் நிலையத்தில் புகாரை போலிசார் எழுதினார். எந்த போலிஸ் என்று தெரியாது. அரசியல் செய்வதால் அடிக்கடி காவல் நிலையம் செல்லும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. சின்னராசு காவல் நிலையம் செல்வதற்கு முன்பே போலிசார் சம்பவத்தை அறிந்து பாருக்கு வந்தார்கள் என்றால் இல்லை நாங்கள் சென்று புகார் கொடுத்த பிறகு தான் வந்தார்கள். காவல் நிலையத்தில் என்னை விசாரிக்கும் போது 10 நிமிடத்தில் முடிந்துவிட்டது வாங்கடா போவோம் என்று சொன்னதாக சொன்னேனா என்றால் இல்லை. செத்துட்டான் வாங்கடா போகலாம் என்று சொன்னேன். இறந்துபோன அப்பு எனது அக்கா மகன். ஆஜர் எதிரிகளை பல வருடங்களாக எனக்கு தெரியும். அவர்கள் அப்பா பெயர், ஊர், எல்லா விபரங்களும் தெரியும். போலிசார் என்னை விசாரிக்கும் போது லெட்சுமணன் அப்புவின் தலையில் வெட்டியதாக சொன்னேன். கேள்விப்பட்டு பாருக்கு எல்லோரும் வண்டியில் சென்றோம். எத்தனை வண்டியில் சென்றோம் என்றால் சுமாராக 4, 5 வண்டிகள் இருக்கும். காவல் நிலையத்தில் என்னை விசாரித்தபோது எல்லாரும் ஓடிப்போனோம் என்று சொன்னேனா என்றால் வண்டியில் சென்றதாக சொன்னேன். சின்னராசுடன் பாருக்கு சென்றதாக சொன்னேன். எங்களுடன் தெருவில் இருந்து 10பேருக்கு மேல் பாருக்கு வந்தார்கள். அப்புவுடன் பாரில் மேலும் 5, 6 பேர் மது அருந்திக்கொண்டிருந்தார்களா என்றால் இல்லை அப்பு மற்றும் எதிரிகளை தவிர வேறு யாரும் பாரில் இல்லை. நான் பெயர் குறிப்பிட்ட 4 பேர் மற்றும் தெருக்காரர்கள் இ ருந்தபோது அப்புவை வெட்டியபோது தடுக்கவில்லையா என்றால் அவர்கள் ஆயுதம் வைத்திருந்தார்கள் அதனால் தடுக்க முடியவில்லை. சின்னராசு அப்புவின் அப்பா என்பதால் அவரை வெட்டும் போது குறுக்கே சென்று தடுத்தாரா என்றால் இல்லை. அப்பு காயம்படும் போது மதுபோதையில் இருந்தார் என்றால் இல்லை. பார் எவ்வளவு நீள அகலம் இருக்கும் என்றால் தெரியாது. பாரில் மது அருந்துவதற்கு எத்தனை மேசைகள்

இருந்தது என்றால் தெரியாது. மேசைகள் மரத்தில் இருந்ததா அல்லது சிமெண்டில் இருந்ததா என்று தெரியாது. அப்பு காயம்படும் போது நான் பாருக்கு வெளியே 10, 15 அடி தூரத்தில் இருந்தேன். 10பேரும் ஒரே தாக்கினார்களா அல்லது ஒருவர் ஒருவராக வெட்டினார்களா என்றால் முதலில் 3 பேர் தனித்தனியாக வெட்டினார்கள். அப்பு கீழே விழுந்துவிட்டார். பிறகு அனைவரும் சேர்ந்து வெட்டினார்கள். நான் போகும் போது அப்பு மனைவி மகாலெட்சுமி, சின்னராசு மனைவி ஜெயந்தி எங்களுடன் வந்தார்களா என்றால் இல்லை. வெட்டியவுடன் எதிரிகள் ஓடிச்சென்றபிறகு நானோ சின்னராசுவோ அப்புவின் உடலை தூக்கி பார்த்தோமா என்றால் இல்லை. உயிர் இருக்கா இல்லையா என்று பார்த்தோமா என்றால் இரத்த வெள்ளத்தில் கிடந்ததால் பார்க்கவில்லை. பாரில் இருந்து காவல் நிலையம் 1 அல்ல ஒன்றரை கிமீ தூரம் இருக்கும். 10 முதல் 10.30மணிக்குள் காவல் நிலையம் சென்றோம். நான் சொல்வது போல் அப்பு காயம்பட்டது எனக்கு தெரியாது என்றும் அப்பு காயம்பட்டதற்கும் எதிரிகளுக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. அப்பு மீது 10, 20 கிரிமினல் வழக்குகள் உள்ளது என்றால் தெரியாது. வழக்கு இருக்கிறது காவல் நிலையம் சென்று வருவார் எத்தனை வழக்கு என்று குறிப்பிட்டு தெரியாது. காவல் நிலைய ரவுடி பட்டியலில் அவரது பெயர் உள்ளது என்றால் சரிதான். அவருக்கு நிறைய எதிரிகள் இருக்கிறார்கள் என்றால் இருக்கலாம். அப்பு எனது உறவுக்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>6 முதல் 9 எதிரிகள், 1, 3, 4, எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.</u>

<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரிக்கும் போது விவேகானந்தன் என்பவர் எங்களை பார்த்தவுடன் சொந்தக்காரர்கள் எல்லாம் வந்துவிட்டார்கள் இனிமேல் அப்புவை உயிருடன் விட்டால் நம்மை போலிசில் காட்டிக்கொடுத்துவிடுவான் அவனை கொல்லுங்கடா என்று சொல்லி விவேகானந்தம் முதலில் அப்புவை தலையில் வெட்டினார் என்று சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றும் முதன்முதலில் நீதிமன்ற விசாரணையில் தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாலைக்கார தெருவுக்கும் அண்ணாநகருக்கும் 100 மீட்டர் இருக்கும். அண்ணாநகரில் இருந்து காமராஜர் நகர் 100 மீட்டர் தூரம் இருக்கும். அந்த பகுதி எனக்கு பரிட்சையமான பகுதி. அண்ணாநகரில் கிட்டத்தட்ட 50 குடும்பங்கள் இருக்கும். காமராஜர் நகரில் 10, 15 குடும்பங்கள் இருக்கும். காமராஜர் நகரில் இருந்து பார் 50லிருந்து 100 மீட்டர் தூரத்தில் இருக்கும். நான் போவதற்கு முன்பாகவே பாரில் காமராஜ் நகர் பகுதி மக்கள் ஒருவர் கூட வரவில்லை. காமராஜர் நகரில் இருந்து பாரை பார்த்தால் தெரியாது. காமராஜர் நகரில் இருந்து ஆதிமாரியம்மன்கோவில் சுமார் 100, 200 மீ தூரம் இருக்கும். ஆதிமாரியம்மன்கோவிலில் இருந்து பார் 100 மீ தூரத்தில் உள்ளது. ஆதிமாரியம்மன்கோவிலில் எப்போது நடமாட்டம் இருக்கும். ஆய்வாளர் என்னை மறுநாள் காலை விசாரித்தார். எத்தனை மணி என்று ஞாபகம் இல்லை. அவர் என்னை தனியாக விசாரித்தார். மற்ற காவலர்கள் பக்கத்தில் தான் இருந்தார்கள். நான் சொல்லும்

போது ஆய்வாளர் கேட்டுக்கொண்டார். கையில் எழுதினாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது கணிணியில் தட்டச்சு செய்தாரா என்றால் ஞாபகம் இல்லை. நான் சொல்லச்சொல்ல வேறு யாராது கணிணியில் தட்டச்சு செய்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. போலிசார் என்னை ஒரு முறை தான் விசாரித்தார்கள். இறந்துபோனவர் எனது அக்கா மகன். எனக்கும் அவருக்கும் சுமூகமான உறவு இருந்தது. போலிசார் விசாரிக்கும் போது நாங்கள் ஓடிச்சென்று பார்க்கும் போது அப்பு சம்பவ இடத்தில் இறந்துகிடந்தான் என்று சொன்னேன் என்றால் இல்லை. அக்கா மகனை தூக்கிச்சென்று மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லையா என்றால் இரத்த வெள்ளத்தில் இருந்தார். பார்த்தால் இறந்தது மாதிரி இருந்தது. அதனால் தூக்கவில்லை. சாலைக்கார தெரு அரிசிக்கார தெரு, ஆட்டுமந்தை தெரு வழியாக காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் ஞாபகம் இல்லை. சாலைக்கார தெருவில் உள்ளவர்கள் அனைவரும் எனது உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து சாலைக்கார தெரு வழியாக காவல் நிலையம் போனோம். போகும் போது நான் சின்னராஜ், இளஞ்செழியன், ஆரோக்கியமுருகன், மோகன்ராஜ் ஆகியோர் சென்றோம். நானும் என் தம்பியும் ஒன்றாக ஒரே வாகனத்தில் சென்றோம். முருகனும் சின்னராசுவும் ஒன்றாக வந்தார்கள். போகும் போது சின்னராசு வீட்டிலோ உறவினர்களிடமோ தகவல் சொல்லவில்லை. நேராக காவல் நிலையம் சென்றுவிட்டோம். நான் 15 வருடங்களாக அரிசிக்கார தெருவில் வசித்து வருகிறேன். எனக்கு ஆதார் அடையாள அட்டை, வாக்காளர் அட்டை அனைத்தும் அரிசிக்கார தெருவில் உள்ளது. போலிசார் விசாரிக்கும் போது நான் 15 வருடங்களாக அரிசிக்கார தெருவில் வசித்து வருவதாகவும் அதன் விலாசத்தையும் சொன்னேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் இருந்து வரும்போது போலிசார் வந்தார்கள் என்ன பொறுப்பில் இருந்தார்கள் என்று தெரியாது. நான் அரசியலில் நீண்டகாலமாக இருப்பதால் ஆய்வாளா யார், காவலர் யார் என்று தெரியும். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபிறகு மீண்டும் சம்பவ இடத்திற்கு டபீர்குளம் ரோடு, சாலைக்கார தெரு வழியாக அல்லது பழையமாரியம்மன்கோவில் வழியாக சென்றேனா என்றல் ஆட்டுமந்தை தெரு, அரிசிக்கார தெரு வழியாக தான் சென்றேன். நான் புகார் கொடுத்துவிட்டு போகும் போது சாலையில் இருந்தவர்கள் அனைவரும் தூங்கிக்கொண்டுதான் இருந்தார்கள். அகால நேரம் என்பதால் அனைவரும் தூங்கிக்கொண்டு இருந்தார்கள். சாலைக்கார ரோடு என்பது மாரியம்மன்கோவிலுக்கு செல்வதற்கு மெயின்ரோடு என்பதால் சாதாரணமாக நடமாட்டமாக இருக்கும் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு போலிசார் எடுத்துச்சென்றுவிட்டார்கள். நானும் மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் ஞாபகம் இல்லை. என் மனைவியிடம் தொலைபேசியில் சொன்னேன். எத்தனை மணிக்கு சொன்னேன் என்று ஞாபகம் இல்லை. நான் செல்லும் போது என் மனைவி என் வீட்டிலேயே தான் இருந்தார். நான் அரசியலில் நீண்டகாலமாக பயணிப்பதால் தாலுக்கா காவல் நிலைய ஆய்வாரை தெரியுமா என்றால் காவல் நிலையம் சென்றதில்லை ஆய்வாளரை தெரியாது. நான் வீட்டிற்கு சென்றபிறகு மறுநாள் என்னை காவல் நிலையத்திற்கு யார் வரச்சொன்னார் என்றால் எனது மாமா சின்னராசு போலிசார் விசாரிக்க

வேண்டும் என்று சொல்லி வரச்சொன்னார். முன்விசாரணையில் சொல்வது போல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றும் நான் சொல்வது போல் சம்பவத்தை பார்க்கவும் இல்லை என்றும் போலிசர் சொன்னதன் அடிப்படையில் சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த அப்பு (எ) ஜெயகாந்தனுக்கு நிறைய குற்றவழக்குகள் உள்ளது என்றால் சரியல்ல. இறந்த அப்பு (எ) ஜெயகாந்தனுக்கும் எதிரிகளுக்குக்ம எந்த சம்பந்தமும இல்லை என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுத்தன்பேரில் இறந்தவர் எனது அக்கா மகன் என்பதால் பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**5 மற்றும் 10-ம் எதிரிகள், 1, 3, 4 எதிரிகளின் குறுக்கு விசாரணையை ஏற்குக்கொள்கிறார்கள்.**

பாருக்கு மேற்க்கு புறம் 3 குடியிருப்பு வீடுகள் இருக்கிறது என்றால் 50 மீ தூரத்தில் இருக்கிறது. பக்கத்தில் இல்லை. சம்பவ காலத்தில் நான் குடியிருந்த அரிசிக்கார தெருவுக்கும் சாலைக்கார தெருவுக்கும் ஒன்றரை கிமீ தூரம்இருக்கும் என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாலைக்கார தெருவுக்கும் சம்பவ இடமாக பாருக்கும் சுமார் 2 கிமீ இருக்கும் என்றால் சரியல்ல. இறந்துபோன அப்புவுக்கு அவரது குற்ற நடத்தையினால் பல விரோதங்கள் உள்ளது என்றும் சம்பவத்தன்று பாரில் குடித்துவிட்டு ஏற்பட்ட தகறாறின் காரணமாக யாரரோ சிலநபர்கள் இந்த சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்றும் தற்போது இறந்தவர் எனது அக்கா மகன் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.